**சுருக்கம்**

பள்ளிக்கல்வி - பொது நூலகங்கள் - தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 21.06.2021 அன்றைய கூட்டத் தொடரில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் அறிவிப்பு - "அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறும் வகையில் புனரமைக்கப்படும்" - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (பொ.நூ.2) துறை

அரசாணை (2 டி) எண். 27

நாள் 25.10.2021.
திருவள்ளுவராண்டு, 2052,
பிலவ வருடம், ஐப்பசி 08.

படிக்கப்பட்டது:-

பொது நூலக இயக்குநரின் கடித ந.க. எண்.234/ அநூநூ/2016, நாள் 12.07.2021.

-------

**ஆணை:-**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 21.06.2021 அன்றைய கூட்டத் தொடரில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரையில் ஏனையவற்றுள், வ.எண்.37-இல் "அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறும் வகையில் புனரமைக்கப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

2. மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேலே படிக்கப்பட்ட பொது நூலக இயக்குநரின் கடிதத்தில், அண்ணா நூற்றாண்டு நூலகமானது, பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் நவீன மாநில நூலகமாக, தேசிய மற்றும் மாநில முக்கியத்துவம் வாய்ந்த நூலகமாக செயல்பட்டு வருவதாலும், மாநிலத்தின் அறிவுசார் கருவூலமாக திகழ்ந்து வருவதனை கருத்தில் கொண்டு, இதன் தரம் மற்றும் பெருமையினை குறையாமல் மேலும் உயர்த்தும் வகையில் செயல்படுத்திட, இந்நூலகத்தின் கட்டட பழுது மற்றும் மின்சாரம் சார்ந்த பழுதுகளை பொதுப்பணித் துறையின் மூலம் சரி செய்து புதுப்பொலிவுடன் புனரமைக்கவும் மற்றும் தொழில்நுட்ப சாதனங்களான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களை நிறுவி, பத்தாண்டுகள் ஆன நிலையில், அச்சாதனங்கள் காலாவதியானதால், புதிய தொழிற்நுட்ப சாதனங்களை வாங்கி பொருத்துவதற்கும் கீழ்க்காணும் அட்டவணையில் உள்ளவாறு மொத்த செலவினத் தொகையாக ரூ.40,21,76,400/- (ரூபாய் நாற்பது கோடியே இருபத்தோரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து வழங்குமாறு பொது நூலக இயக்குநர் கோரியுள்ளார்:

//த.பி.பா.//

சுருக்கம்

| வ. எண். | பொருள் விவரம் | மதிப்பீட்டு மற்றும் உத்தேச செலவின தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கட்டடம் பழுது பார்ப்பு | 20,65,00,000 |
| 2. | மின்சாரம் பழுது பார்ப்பு | 14,22,78,700 |
| 3. | தொழில் நுட்பம் சார்ந்த பணிகள் | 5,33,97,700 |
| | மொத்தம் = | 40,21,76,400 |

3. பொது நூலக இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் கட்டடம் மற்றும் மின்சாரம் சார்ந்த பழுதுகளை புனரமைக்கவும், புதிய தொழிற்நுட்ப சாதனங்களை வாங்கி பொருத்துவதற்கு கீழ்க்காணும் அட்டவணையில் உள்ளவாறு மொத்த செலவினத் தொகை ரூ.37,82,22,032 /-க்கு (ரூபாய் முப்பத்தி ஏழுகோடியே எண்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து முப்பத்தி இரண்டு மட்டும்) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அதற்கான செலவினத்தை அரசு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண் | பொருள் விவரம் | ஒப்பளிப்பு செய்யப்படும் செலவினத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கட்டடம் பழுது பார்ப்பு | 18,25,45,632 |
| 2. | மின்சாரம் பழுது பார்ப்பு | 14,22,78,700 |
| 3. | தொழில் நுட்பம் சார்ந்த பணிகள் | 5,33,97,700 |
| | மொத்தம் = | 37,82,22,032 |

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2205-00- கலையும் பண்பாடும் - 105 பொது நூலகங்கள்- மாநிலச் செலவினங்கள் – AA பொது நூலகங்கள் இயக்ககம் -318 பராமரிப்பு – 02 –சிறப்பு பராமரிப்பு"
(த.தொ.கு.2205 00 105 AA 31802)"

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (NEW INSTRUMENT OF SERVICE) குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு செலவு பொது-1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை A படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வரவு செலவு பொது 1) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு பொது நூலக இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-22-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் / திருத்தமதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு பொது 1/கல்வி-II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பொது நூலக இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.44291 ./ கல்வி – II / 2021, நாள் 22.10.2021-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.641 (அறுநூற்று நாற்பத்தி ஒன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை - 2.
மாநில கணக்காயர், சென்னை – 18/35.

**நகல்:-**
அரசு முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
நிதித் (கல்வி-II/ வரவு செலவு பொ-I/2/வ.வ.) துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக்கல்வித் (வரவு செலவு)துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. மாலதி 25/10/21
பிரிவு அலுவலர்.
25/10/2021